வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 88 of 2023

வழக்கு சாட்சி - DW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சரவணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சொக்கலிங்கம் | தொழில் | : | ராம்ராஜ் கார்ட்டன், HR Department, Legal Work |
| கிராமம் | : | தாராபுரம் ரோடு | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.10.2024.

(புகார்தாரர், எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.10.2024**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. எதிரி ஆர்.ஆர்.பாபு எங்கள் நிறுவனத்தில் Merchandiser ஆக 2019 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை வேலை பார்த்து வருகிறார். 2022 ஆம் வருடம் 8 வது மாதத்திலிருந்து 11 மாதம் வரையுள்ள அவரது வருகை பதிவேட்டின் சான்றிட்ட நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்கிறேன். எதிரியின் வேலை நேரம் என்பது காலை 9.00 மணிலிருந்து இரவு 7.00 மணி வரை இருக்கும். உணவு இடைவெளி நேரம் என்பது மதியம் 1 மணிலிருந்து 2 மணிக்குள் அவரது வேலையை பொறுத்து எடுத்துக்கொள்வார். குறிப்பிட்டு இத்தனை மணி என்பது அவருக்கு கிடையாது.

2. 2022 வருடம் 8 வது மாதத்தில் அவர் எந்த தேதியில் விடுப்பு எடுத்துள்ளார் என்றால் 16 ஆம் தேதி அரைநாள் விடுப்பு எடுத்துள்ளார். 17 ஆம் தேதியும் அரைநாள் விடுப்பு எடுத்துள்ளார். 30, 31 ஆம் தேதிகளில் விடுப்பு எடுத்துள்ளார். அதேபோல் 10 வது, 11 வது மாதத்தில் எப்போது விடுப்பு எடுத்துள்ளார் என்றால் அக்டோபர் மாதத்தில் 13 ஆம் தேதி விடுப்பு, 18 ஆம் தேதி அரைநாள் விடுப்பு, 24, 25 ஆகிய தேதிகளில் விடுப்பு எடுத்துள்ளார். நவம்பர் மாதத்தில் 6, 13, 20, 27 ஆம் தேதிகளில் வார விடுமுறை, 8 ஆம் தேதி அரை நாள் விடுப்பு, 14 ஆம் தேதி அரை நாள் விடுப்பு, 26 ஆம் தேதி பாதி நாள் வரவில்லை, 28 ஆம் தேதி முழுவதும் வரவில்லை. கண்டிப்பாக நிறுவனத்திற்குள் வரும்போது, நிறுவனத்தைவிட்டு மாலை வெளியே செல்லும்போது Biometric வைத்து செல்லவேண்டும் என்றால் சரிதான்.

இடைப்பட்ட காலத்தில் நிறுவனத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்றால் நிறுவனத்தில் அனுமதிபெற்று தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி பெற்று சென்றுள்ளாரா என்றால் அந்த ஆவணத்தை நான் எடுத்து வரவில்லை. பார்த்தால் தான் தெரியும்.

(ஆவணங்கள் தாக்கல் செய்வதற்கு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.10.03 19:44:09 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 88 of 2023

வழக்கு சாட்சி - DW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கார்த்திக்ராஜா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | தியாகராஜன் | தொழில் | : | கிளை மேலாளர் |
| கிராமம் | : | சிட்டி யூனியன், வங்கி | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் கிளை | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.10.2024.

(புகார்தாரர், எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.10.2024**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. 1 ஆம் எதிரி நிறுவனத்தின் 2019 லிருந்து 2024 ஆம் ஆண்டுவரையிலான நடப்பு கணக்கு பட்டியலின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அந்த காலகட்டத்தில் காசோலை மூலமாகவோ, நிறுவன கணக்கு வரவு செலவு மூலமாகவோ வரவு செலவு நடைபெறவில்லை என்றால் சரிதான். **அந்த 2019 லிருந்து 2024 ஆம் ஆண்டுவரையிலான நடப்பு கணக்கு பட்டியலின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1** ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. 1 ஆம் எதிரி நிறுவனத்தின் நடப்பு கணக்கு தற்போது வரை நடப்பில் உள்ளதா என்றால் இல்லை. அந்த கணக்கு எப்போது முடிக்கப்பட்டது என்றால் 05.03.2020 ஆம் தேதி முடிக்கப்பட்டது. கணக்கு முடிக்கப்பட்டபோது அந்த கணக்கிற்கு அவரது கைவசம் இருந்த காசோலைகளை வங்கியில் திரும்ப ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு ஒப்படைக்காதது வங்கி விதிமுறைப்படி தவறு என்றால் சரிதான். பொதுவாக காசோலை தொலைந்து போயிருந்தால் பணமாக்ககூடாது என்ற Stop Payment Requisition கொடுக்கவேண்டும் என்றால் சரிதான்.

3. 1 ஆம் எதிரியின் கணக்கு பங்குதாரர் கணக்கு என்றால் சரிதான். அதில் ஒரு பங்குதாரர் விலகும்போது விலகுவதற்கான ஒப்பந்தத்தினை வங்கியில் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு 2019 ஆம் ஆண்டில் எதிரி விலகியதாக சொல்லப்படுவதற்கு

ஆவணங்கள் எதுவும் வங்கில் சமர்ப்பித்துள்ளாரா என்றால் என்னிடம் கேட்காததால் அதை நான் எடுத்து வரவில்லை. எனக்கு அதுபற்றி தெரியாது. ஒரு நபர் விலகிய பின்பு யார் அந்த நிறுவனத்தை தொடர்கிறார்கள் என்பதற்கு ஆவணத்தை வங்கியில் சமர்ப்பிக்கவேண்டும் என்றால் சரிதான். இந்த வங்கி கணக்கு தவிர வேறு வங்கியில் வங்கி கணக்கு உள்ளதா என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.10.03 19:44:17 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.